செ.வெ. எண்:130 நாள்:13.09.2016

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் **செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்களின்

அறிக்கை – 13 .9.2016

அமிழ்தினும் இனிய அருந்தமிழ் மொழி, காலத்தின் மாறுதல்களை எல்லாம் எதிர்கொண்டு, எதிர்ப்புகளையும் அறைகூவல்களையும் சந்தித்து, உலக மொழிகளில் இன்றும் சிறந்த மொழியாக மிளிர்ந்து கொண்டிருக்கிறது.

“தெள்ளூற்ற தமிழமுதின் சுவை கண்டார்
இங்கு அமரர் சிறப்புக் கண்டார்’’

என்ற மகாகவி சுப்பிரமணிய பாரதியாரின் கூற்றை மெய்ப்பிக்கும் வகையில், தமிழுக்காகப் பாடுபடும் அறிஞர்களுக்கும், சான்றோர்களுக்கும் எண்ணற்ற நலத் திட்டங்களையும், உதவிகளையும், சிறப்புகளையும் எனது தலைமையிலான அரசு தொடர்ந்து செயல்படுத்தி வருகிறது.

அந்த வகையில், கடந்த 5 ஆண்டுகளில் அன்னைத் தமிழுக்குப் பாடுபடும் சான்றோர்களுக்கும், அறிஞர்களுக்கும், சிறப்புச் செய்யும் வகையில் 55 விருதுகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

தமிழ் மொழியின் பெருமையினை பிற நாட்டவரும் அறியும் வண்ணம், உலகப் பொதுமறையாம் திருக்குறள், சீனம் மற்றும் அரபு மொழிகளில் மொழி பெயர்க்கப்பட்டு எனது தலைமையிலான அரசால் வெளியிடப்பட்டுள்ளது. மேலும், திருக்குறள் கொரிய மொழியில் மொழி பெயர்க்கப்பட்டு வெளியிடப்படும் நிலையில் உள்ளது.

அதே போன்று, மகாகவி பாரதியார் பாடல்களும், புரட்சிக்கவிஞர் பாரதிதாசன் பாடல்களும், சீனம் மற்றும் அரபு மொழிகளில் மொழி பெயர்க்கப்பட்டு வெளியிடப்பட்டுள்ளன.

எங்களது தேர்தல் அறிக்கையில், ‘பண்டை தமிழ் நூல்கள் பிற மொழிகளில் மொழியாக்கம் செய்யப்படும்’ என்ற வாக்குறுதி அளிக்கப்பட்டுள்ளது. இதனை செயல்படுத்தும் வகையில், பதினெண்கீழ்க்கணக்கு நூல்களில் தெரிவு செய்யப்பட்ட நூல்கள், உலக மொழிகளான பிரெஞ்சு, ஜெர்மன் மொழிகளிலும், இந்திய மொழிகளான மலையாளம், இந்தி, தெலுங்கு ஆகிய மொழிகளிலும் மொழி பெயர்க்கப்படும். இப்பணிகளை உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் மூலம் செயல்படுத்த நான் உத்தரவிட்டுள்ளேன்.

இதன் மூலம், தமிழ் மொழியின் வளம் பற்றி உலக மக்கள் அறிவதற்கு மேலும் வழிவகை ஏற்படும்.

**ஜெ ஜெயலலிதா**
தமிழ்நாடு முதலமைச்சர்

**வெளியீடு: – இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை.**